

# பரப்பாதீர்கள்: சந்தேகமான செய்திகளைக் கையாள்வது எப்படி

குறுஞ்செய்தி, WhatsApp, WeChat, Line போன்ற சமூக ஊடகச் செயலிகள் போன்றவற்றின்மூலம் பொய்யான கதைகள் எளிதில் பரப்பப்படலாம்.



**சந்தேகத்திற்குரிய செய்திகள் உங்களுக்கு வந்தால், நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:**

## 1 செய்தியின் நம்பகத்தன்மையைச் சரி பாருங்கள்:

- செய்தி நம்பகமான மூலத்திலிருந்து வந்திருக்கிறதா?
- அதை எழுதியவர் அந்தத் துறையில் நிபுணரா?
- அந்தத் தகவலை செய்தித்தாள், தொலைக்காட்சி, வானொலி போன்ற மற்ற மூலங்களோடு சரி பாருங்கள்
- இன்னும் சந்தேகமாக இருந்தால், குடும்பத்தினரைக் கேளுங்கள்

## 2 பொய்யான தகவலுக்கு உரிய அறிகுறிகளைக் கவனித்துப் பாருங்கள்.

- தவறான இணையப்பக்க முகவரி குறிப்பிடப்பட்டிருப்பது
- இலக்கண அல்லது எழுத்து பிழைகள்
- சம்பந்தப்பட்ட நபர்கள், நேரம், சம்பவ இடங்கள் போன்றவற்றைப் பற்றிய அரைகுறை விவரங்கள்
- உணர்ச்சிகளுக்குக் குறிவைக்கும் உள்ளடக்கம் – நம்பமுடியாத சலுகைகளைக் கண்டு எச்சரிக்கையாக இருங்கள்

## 3 பகிர்வதற்கு முன்பு சிந்தியுங்கள்

- தெரியாமல் பொய்யான தகவலை நீங்களும் பரப்பாதீர்கள்

## 4 கட்டுக்கதைகளைத் தகர்ப்பவர்களோடு இணையுங்கள்

- தகவலை அனுப்பியவரிடம் செய்தி பொய்யானது என தெரிவியுங்கள்

nlb.gov.sg/sure/
fb.com/NationalLibrarySG

**S**ource Look at its origins. Is it trustworthy?
**u**nderstand Know what you're reading. Search for clarity.
**r**esearch Dig deeper. Go beyond the initial source.
**e**valuate Find the balance. Exercise fair judgement.

s.u.r.e. Source·Understand·Research·Evaluate